**கவனிக்க.**-2007.08.31 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1514 - 2007 සැප්තැම්බර් 07 වැනි සිකුරාදා - 2007.09.07

1514 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 793 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | 795 |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 797 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 788 | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, செத்தெம்பர் 14 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, ஓகத்து 31 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# ஆய விற்பனையும் குத்தகையும்

## இரத்தினபுரி மாவட்டத்தில், பின்னவல-கள்ளுத்தவறணை இலக்கம் 2 இன் ஏல விற்பனை - 2008

2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையுள்ள கால எல்லைக்குள் கீழ் அட்டவணையில் காணப்படும் பிரதேசத்தில் கள்ளு சில்லறைக்கு விற்பதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் :-

(i) 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத்தவறணை ஏலவிற்பனை தொடர்பான நிபந்தனைகளுக்கும் ;

(ii) மதுவரி கட்டளைச் சட்ட நிபந்தனையில் காட்டப்பட்டுள்ள எல்லா மதுபான விற்பனை உத்தரவுப்பத்திரம் சம்பந்தமான பொது நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகவும்,

2. எல்லா விலைமனுக்களுடனும் பிரதேச செயலகத்தில் அல்லது இலங்கை வங்கி மாவட்ட கிளை அலுவலகத்தில் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் இணைக்க வேண்டும். பின்னவல இல. 2 கள்ளுத் தவறணைக்காக ரூபா 1,500 செலுத்த வேண்டும்.

3. இலங்கையில் எல்லா பிரதேச செயலகங்களிலும், கொழும்பு மதுவரி ஆணையாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளகூடிய குறிப்பிட்ட படிவத்தில் எழுதப்பட்ட விலைமனுவை உறையில் இட்டு, முத்திரையிட்ட அவ்வுறையின் இடப்பக்க மேல் மூலையில் "பின்னவல இல. 2 கள்ளுத் தவறணைக்கான விலைமனு" என்று தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். குறிப்பிட்ட விலைமனு முடிவடையும் முன் இம்புல்பே பிரதேச செயலாளர் என்ற முகவரிக்கு பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனு பெட்டியில் இட வேண்டும்.

4. எல்லா விலைமனுக்காரர்களும் தமது சொந்த பெயரிலேயே விலைமனுவை சமர்ப்பிக்க வேண்டும்.

5. ஒருவருக்கு ஒரு கள்ளுத் தவறணைக்கு மேலாக விலைமனு கோரப்படமுடியாது. ஒரு கள்ளுத்தவறணைக்காக 5 பேருக்கும் மேலாக விண்ணப்பம் கோரமுடியாது. விலைமனுவில் குறிப்பிட்டுள்ள பணம், இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும். விலைமனுக்கோரும் எல்லா மனுக்களிலும் அவரின் கையொப்பமும் திகதியும் இட்டு உறுதிப்படுத்த வேண்டும். எல்லா விலைமனுக்களும் சாட்சியாளர் இருவரால் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும். நிபந்தனைகளுக்கு உட்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

6. வெற்றி பெற்ற விலைமனுக்காரர் விலைமனுவை வாங்கியதாகக் கருதப்பட்டு பின் கள்ளுத்தவறணை ஏற்கப்படும் பத்திரத்தில் கையொப்பமிட்டு இம்புல்பே பிரதேச செயலாளரினால் குறிப்பிடப்படும் பணத்தைப் பிணைப்பணமாகச் செலுத்த வேண்டும்.

7. 2007 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதி மு. ப. 10.00 மணி வரை விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும் காலம் முடிவடைந்தவுடன் விலைமனுப்பெட்டி திறக்கப்படும். எல்லா விலைமனுக்காரரும் இங்கு கூறப்பட்ட நேரத்தில் இம்புல்பே பிரதேச செயலகத்தில் சமுகமளிக்க வேண்டும்.

8. எந்தவொரு காரணமுங்காட்டாது எந்தவொரு விலைமனுவையும் அல்லது மனுக்களையும் சொந்த விருப்பின் பேரில் நிராகரிக்கும் அதிகாரம் இம்புல்பே பிரதேச செயலாளருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

9. குறிப்பிட்ட தினத்தில் இந்த கள்ளுத்தவறணை ஏற்கப்படாவிட்டால் அதன் மீள்விற்பனை 2007.10.22 ஆந் திகதி மு. ப. 10.30 க்கு நடைபெறும். அன்றைய தினம் இதற்கான விலைமனுவானது வர்த்தமான அறிவித்தலின்படி ஏற்றுக்கொள்ளப்படும்.

10. 2008 ஆம் ஆண்டிற்காக தற்பொழுது கள்ளுத்தவறணையை நடாத்திக்கொண்டிருக்கும் இடத்தையே பெற்றுக்கொள்ள முடியும் என்பதனைக் கூறமுடியாது. விலைமனுக்காரர் குறிப்பிட்ட பிரதேசத்தில் கட்டிடமொன்றை (இடம்) தேடிக்கொள்ளலாம். அந்தக் கட்டிடத்திற்காக மதுவரி ஆணையாளர் அலுவலகத்தில் அனுமதி பெற்றுக்கொள்ளல் வேண்டும். கட்டிடத்தைப் பெற்றுக்கொடுக்க உத்தரவுப் பத்திர அதிகாரிக்கு உடன்பாடு இல்லை என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

எம். எம். குணசிங்க,
பிரதேச செயலாளர்,
இம்புல்பே.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
இம்புல்பே,
2007.07.30

**அட்டவணை**

| கள்ளுத்தவறணையின் பெயர், இலக்கம் | பிரிவு | அமைந்துள்ள பிரதேசம் | திறந்திருக்கும் நேரம் | விலைமனு ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|
| பின்னவல - கள்ளுத்தவறணை இல. 2, | கடகவத்த கோரளை, | பின்னவல நகரம் | மு.ப. 11.00 பி.ப. 02.00<br>பி.ப. 05.00 பி.ப. 08.00 | 2007.09.24 மு.ப.10.30 |

9-06

---

## கட்டானை பிரதேச செயலாளர் பிரிவின் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை – 2008

கீழ் தரப்பட்டிருக்கும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளில் 2008, சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் புளித்த கள்ளினை சில்லறையாக விற்கும் பிரத்தியேக உரிமையினை வழங்குவதற்கு 1982, ஓகத்து மாதம் 20 ஆந் திகதியுடைய 207 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விதிகளுக்கமைவாகவும் நடைமுறையிலுள்ள பொது விதிகளுக்கமைவாகவும் இங்கு கீழே குறிப்பிட்டுள்ள விதிகளுக்கமைவாகவும் கேள்விப்பத்திரங்கள் 2007.10.02 ஆந் திகதி மு.ப.10.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரக்காரரினால் எப்பிரதேச செயலாளர் அலுவலகத்திலுமுள்ள விண்ணப்பப்படிவத்தில் முறையாகத் தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை இங்கு கீழுள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள நிரந்தர வைப்புப் பணத்தை செலுத்தியதற்காக பெறப்பட்ட பிரதேச அலுவலக பற்றுச்சீட்டுடன் கள்ளு விற்பனை நிபந்தனைகளுக்கமைவாகப் பெறப்பட்ட பெறுமதிச் சான்றுப் பத்திரத்துடன் பொறிக்கப்பட்டதும் இடது பக்க மூலையில் இங்கு பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் கேள்விப்பத்திரம் வழங்கப்படும். "தவறணையின் பெயரும் இலக்கமும்" தெளிவாகக் குறிப்பிடப்பட்டதுமான கடித உறையில் இட்டு மேற்படி கேள்விப்பத்திரங்களை இப்பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திர பெட்டியில் இடுதலோ அல்லது கட்டானை பிரதேச செயலாளருக்கு விலாசமிட்டு பதிவுத் தபால்மூலம் இங்கு பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித்திகதிற்கு முன்னதாக அனுப்புதலோ வேண்டும்.

கேள்விப்பத்திரத்தில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள், திருத்தங்கள் எல்லாவற்றிற்கும் எதிரில் கேள்விப்பத்திரக்காரர் தமது ஒப்பத்தையிடுவதன் மூலம் அவற்றை உறுதி செய்தல் வேண்டும். இவ்வாறான தேவைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.

கேள்விப்பத்திர முடிவுத் திகதியான 2007.10.02 ஆந் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு எல்லா கேள்விப்பத்திரதாரர்களும் கட்டானைப் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

எந்தவொரு கேள்விப்பத்திரத்தையோ அல்லது எல்லாக் கேள்விப்பத்திரங்களையோ எவ்வித காரணங்களையும் காட்டாது நிராகரிக்கும் உரிமை பிரதேச செயலாளருக்குண்டு.

உரிய திகதியில் விற்பனை செய்ய இயலாத கள்ளுத்தவறணைகள் 2007.11.05 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும். அன்றைய தினத்தில் கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்தல் இவ்வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தல்களுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்கள் எவருடையது என்பதை அறிவித்தவுடன் அன்றைய தினம் பி. ப. 2.00 மணிக்கு முன்பதாக குத்தகையின் கேள்விப்பத்திரதாரர்கள் இரண்டு மாத வாடகைக்கு குறையாது தீர்மானிக்கப்படும் தொகையை பிணைப்பணமாக கட்டானை பிரதேச செயலாளருக்குச் செலுத்தி குத்தகை விற்பனைக்கான நிபந்தனைகளுக்கு ஒப்பமிடல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவையானோர் அவற்றினை கட்டானை பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

எம். எச். ஜீ. பண்டார,
பிரதேச செயலாளர்,
கட்டானை.

பிரதேச செயலகம்,
கட்டானை,
தெமங்ஹந்திய.
2007.08.01

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | தவறணையின் பெயரும் இலக்கமும் | பிரிவு | தவறணை அமைந்துள்ள உள்ளூராட்சிப் பிரதேசம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | கேள்வி வைப்பு ரூபா | கேள்விப்பத்திரம் பொறுப்பேற்கும் இறுதித் திகதி யும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | மூக்கலன்கமுவை இல. 13 | கட்டானை | மூக்கலங்கமுவை கிராமத்தில் மட்டும் | மு. ப. 11.00 பி. ப. 5.00 | பி. ப. 2.00 பி. ப. 8.00 | 4,000 | 2007.10.02 மு. ப. 10.30 |
| 2. | கட்டுநாயக்க இல. 14 | கட்டானை | கட்டுநாயக்க கிராமத்தில் மட்டும் | மு. ப. 11.00 பி. ப. 5.00 | பி. ப. 2.00 பி. ப. 8.00 | 4,000 | 2007.10.02 மு. ப. 10.30 |
| 3. | ஆனகாலை இல. 23 | கட்டானை | ஆனகால கிராமத்தில் மட்டும் | மு. ப. 11.00 பி. ப. 5.00 | பி. ப. 2.00 பி. ப. 8.00 | 500 | 2007.10.02 மு. ப. 10.30 |
| 4. | கி. கட்டான இல. 24 | கட்டானை | கி. கட்டானை கிராமத்தில் மட்டும் | மு. ப. 11.00 பி. ப. 5.00 | பி. ப. 2.00 பி. ப. 8.00 | 2,000 | 2007.10.02 மு. ப. 10.30 |
| 5. | தெமன்ஹந்திய இல. 27 | கட்டானை | தெமன்ஹந்திய கிராமத்தில் மட்டும் | மு.ப. 11.00 பி. ப. 5.00 | பி. ப. 2.00 பி. ப. 8.00 | 2,000 | 2007.10.02 மு. ப. 10.30 |
| 6. | பம்புக்குளி இல. 26 | கட்டானை | பம்புக்குளி கிராமத்தில் மட்டும் | மு.ப. 11.00 பி. ப. 5.00 | பி. ப. 2.00 பி. ப. 8.00 | 1,000 | 2007.10.02 மு. ப. 10.30 |

9-60

---

**கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2008**

1982 ஆம் ஆண்டு ஓகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையிலுள்ள கள்ளுத்தவறணை குத்தகை விற்பனையின் நிபந்தனைகளும் தற்போது நடைமுறையில் உள்ள மதுபானக் குத்தகை அனுமதிப்பத்திரம் சம்பந்தமான பொது நிபந்தனைகளின்படி நொதித்த மதுபானம் சில்லறையாக கீழ்க்காட்டப்படும் தவறணையில் 2008, சனவரி மாதம் 1 ஆந் திகதியிலிருந்து 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை தனியுரிமைப்படி விற்பனைக்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

2. கொழும்பு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்தின் மூலம் கேள்விப்பத்திரத்துடன் 'எப்' நிரலில் ஒவ்வொரு தவறணைக்கும் நேராக காட்டப்படும் உரிய பணத்தை வைப்புச் செய்தபடி பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும் பிரதேச செயலாளரிடம் பெற்றுக்கொண்ட சொத்துரிமைச் சான்றிதழையும் வைத்து அனுப்பி வைக்க வேண்டும். பிரதேச செயலாளரிடம் பெற்றுக்கொள்ளும் சொத்துரிமைச் சான்றிதழ் அச்சான்றிதழின் உப பிரிவில் அடங்கியுள்ள, அச்சான்றிதழை வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்ட எந்த ஒரு சொத்தையும் விற்காவிட்டால் அந்த சொத்துரிமைச் சான்றிதழ் வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஐந்து வருட காலத்திற்கு ஏற்புடையது. குத்தகைக் காலம் முடிவடைய முன்னர் சொத்துரிமைச் சான்றிதழ் ஏற்புடைய காலம் முடிவடையும் சந்தர்ப்பத்தில் பூரண குத்தகைக் காலத்திற்காகவும் ஏற்புடைய புதிய சொத்துரிமைச் சான்றிதழ் ஒன்றை கேள்வியுடன் சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் குத்தகைக் காலம் முடியும் வரை உள்ள எஞ்சிய காலத்துக்காக குறைநிரப்பு சொத்துரிமைச் சான்றிதழ் ஏற்புடைய காலம் முடிவடைய குறைந்தபட்சம் 1 மாதத்திற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.

3. முத்திரை பதிக்கப்பட்ட கடித உறையில் இட்டு ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் உள்ள உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இல............ ஐக் கொண்ட கள்ளுத் தவறணை குத்தகைக்கான கேள்விப்பத்திரம் - கொழும்பு" எனக் குறிப்பிட்டு (அ) கொழும்பு பிரதேச செயலகத்தில் கேள்விப்பெட்டியில் இடுவதன் மூலம் அல்லது (ஆ) பதிவுத்தபாலில் கொழும்பு பிரதேச செயலாளருக்கு அனுப்புவதன் மூலம் அல்லது கீழ்க்காட்டப்படும் அட்டவணையில் ஒவ்வொரு தவறணைக்கும் நேராக காட்டப்பட்டுள்ள தினத்திலும் நேரத்திலும் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கச் செய்ய வேண்டும். கேள்விதாரர் கேள்வி பொறுப்பேற்கும் இறுதி நேரத்தில் அலுவலகத்திற்கு பிரசன்னமாகி இருத்தல் வேண்டும்.

4. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அந்த நேரத்திலேயே வாங்குபவராக அறிவிக்கப்படுவதுடன், மேற்கூறப்பட்ட மதுபான குத்தகை விற்பனை நிபந்தனைகளின்படி சிறப்புரிமை விற்பனை நிபந்தனை கைச்சாத்திடுவதற்காக குறிக்கப்படும் தொகைப் பணத்தை பிணையாக பிரதேச செயலாளருக்கு வழங்க வேண்டும்.

5. பணத்திற்கு வாங்குவதற்காக சிறப்புரிமை பெற்ற கேள்விதாரர் விற்பனை சம்பந்தமான நிபந்தனைகளுக்கு கைச்சாத்திடுவதை மறுப்பதனால் அல்லது தேவைப்படும் பிணைப் பணத்தை உரிய சந்தர்ப்பத்தில் கட்டத் தவறும் பட்சத்தில் உங்களால் வைக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் இல்லாமல் போவதுடன், கேள்விதாரராக அவரது பெயர், மதுபான குத்தகைப்பத்திரம் சம்பந்தமாக குற்றவாளிகளின் பெயர் பட்டியலில் இடம்பெறக்கூடும்.

6. 2007 ஆம் வருடம் சம்பந்தமாக தற்போது கள்ளுத் தவறணை வைத்திருக்கும் இடத்தையே பெற்றுக்கொள்ள முடியுமா என்பதைச் சொல்ல முடியாது. வெற்றிகரமான கேள்விதாரரினால் உரிய பிரிவினுள் பொருத்தமான கட்டிடத்தை தேடிக்கொள்ள வேண்டி இருப்பதுடன் அந்தக் கட்டிடத்துக்காக மதுவரி ஆணையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். கட்டிடம் வழங்குவதற்காக பிரதேச செயலாளர் கட்டுப்படவில்லை என்பதை கவனத்திற் கொள்ளவேண்டும்.

7. எவ்வித காரணமும் காட்டாது ஒன்றை அல்லது சகல கேள்வியையும் மறுப்பதற்கு பிரதேச செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

8. அனுமதிக்கப்பட்ட கள்ளுத் தவறணை பட்டியல் கீழே காட்டப்படுகிறது :-

**அட்டவணை**

| (ஏ) தொடர் இல | (பீ) பிரதேசம் | (சீ) செயலகப் பிரதேசம் தவறணை அமைய வேண்டிய பிரதேசம் | (டீ) தவறணை திறக்கும் நேரம் | (ஈ) தவறணை மூடும் நேரம் | (எப்) கேள்விக்காக வைப்புச் செய்ய வேண்டிய பணம் ரூபா | (ஜீ) கேள்வி ஏற்றுக் கொள்ளும் இறுதி நேரம் | (எச்) விற்பனை செய்யும் தினம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | இலக்கம் 5 வட்டாரம் - கொட்டாஞ்சேனை மேற்கு (கோட்டபோம்) | பிரதேசம் இவ்வாறு எல்லைப் படுத்தப்பட்டுள்ளது.- வடக்கு- ஸ்கினர் வீதியில் தெற்கு பிரதேச சந்தியிலிருந்து கொடபோம் வீதி சந்தியும் லஸ்கரீன் வீதி சந்தி வரை யாகும். கிழக்கு - லஸ்கரின் வீதி சந்தி வரையாகும் கிழக்கு - லஸ்கரின் வீதியிலிருந்து மேற்குபக்க ஸ்கினர் வீதி (தெற்கு) சந்தியிலிருந்து உள்ள பிரதேசமும் ஜம்பட்டா வீதியின் தெற்காக அச்சந்தியிலிருந்து ஜம்பட்டா வீதியின் வடக்கு பிரதேச கொடபோம் வீதியும் லஸ்கரின் வீதியின் சந்தி வரை உள்ள பகுதியும் மேற்குக்கு அச்சந்தியிலிருந்து கொடபோம் வீதியின் கிழக்கு பிரதேசம் ஜம்பட்டா வீதியின் சந்தியிலிருந்து ஸ்கினர் வீதி (வடக்கு) சந்தி வரை உள்ள பிரதேசமும். | மு. ப. 11.00 பி. ப. 5.00 | பி. ப. 2.00 பி. ப. 8.00 | 5,000 | மு. ப. 10.30 | 2007.09.20 |
| 2 | இல. 5 வட்டாரம் - கொட்டாஞ்சேனை மேற்கு (ஸ்கினர் வீதி) | அச்சந்தியிலிருந்து வடக்கு ஸ்கினெர் வீதியின் வடக்கு பிரதேசம் பிக்கரின் வீதியினதும் கொட்டாஞ்சேனை வீதியின தும் சந்தி வரையான பிரதேசம் | மு. ப. 11.00 பி. ப. 5.00 | பி. ப. 2.00 பி. ப. 8.00 | 5,000 | மு. ப. 10.30 | 2007.09.20 |
| 3. | இல. 2 வட்டாரம் - முகத்துவாரம் | (ஏ) மேல் வீதிப் பிரதேசம் அன்றூ பிரதேச சந்திவரை அளுத்மாவத்தை வீதியும் சாந்த அன்றூ வீதியின் சந்தி வரை. (பீ) சாந்த அன்றூ வீதிப் பகுதி வரை மேல் சாந்த அன்றூ பிரதேச மும் மாசன் வீதியின் சந்தி வரை. (சீ) மோதர வீதி பகுதியும் அச்சந்தி வரை மாஷன் வீதியும் மாதம்பிட்டி வீதியின் சந்தி வரை (டீ) சாந்த ஜேம்ஸ் வீதியின் இரு பக்கங் களும் அங்குள்ள சந்தி வரை மோதர வீதியும் அளுத்மாவத்தை வீதியின் சந்தி வரை. (ஈ) அளுத் மாவத்தை வீதியின் இருபக்கமும் அங்குள்ள சந்தி வரையும் அங் குள்ள சிறு பாதையும் கீழ் சாந்த அன்றூ பிரதேச சந்தி வரையாகும். | மு. ப. 11.00 பி. ப. 5.00 | பி. ப. 2.00 பி. ப. 8.00 | 5,000 | மு. ப. 10.30 | 2007.09.20 |

| (ஏ) தொடர் இல | (பீ) பிரதேசம் | (சீ) செயலகப் பிரதேசம் தவறணை அமைய வேண்டிய பிரதேசம் | (டீ) தவறணை திறக்கும் நேரம் | (ஈ) தவறணை மூடும் நேரம் | (எப்) கேள்விக்காக வைப்புச் செய்ய வேண்டிய பணம் ரூபா | (ஜி) கேள்வி ஏற்றுக் கொள்ளும் இறுதி நேரம் | (எச்) விற்பனை செய்யும் தினம் |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | இல. 3 வட்டாரம் - மாதம்பிட்டிய (பர்கியூசன் வீதி) | பிரதேசம் இவ்வாறு எல்லைப் படுத்தப்பட்டுள்ளது. வடக்கு -பர்கியுசன் வீதியின் தெற்குப் பகுதியிலிருந்து சந்திவரையும், கிழக்கு லூகஸ் வீதியின் மேற்குப் பிரதேசத்திலிருந்து சந்திவரை, பர்கியுசன் வீதியும், மாதம்பிட்டி வீதியின் சந்திவரை தெற்கு மாதம்பிட்டி வீதியின் வடக்கு பகுதியிலிருந்து சந்திவரை, லூகஸ் வீதியின் சந்திவரை, மேற்கு-டேனியல் வீதியின் கிழக்குப் பிரதேசத் திலிருந்து சந்திவரை மாதம்பிட்டி வீதியும், ஹேனமுல்ல சிறு வீதியின் சந்திவரையாகும். | மு. ப. 11.00 பி. ப. 5.00 | பி. ப. 2.00 பி. ப. 8.00 | 5,000 | மு. ப. 10.30 | 2007.09.20 |
| 5 | இல. 3 வட்டாரம் - மாதம்பிட்டிய | பிரதேசம் இவ்வாறு எல்லைப் படுத்தப்பட்டுள்ளது. வடக்கு- பர்கியுசன் வீதியின் தெற்குப் பகுதியிலிருந்து சந்திவரை, லூகஸ் வீதியும் நாகலகம் வீதியின் சந்திவரை, கிழக்கு - நாகலகம் வீதியின் தெற்குப் பிரதேசத்திலிருந்து சந்திவரை பர்கியுசன் வீதியும், மாதம்பிட்டி வீதியின் வடக்குப் பிரதேசத் திலிருந்து சந்திவரை நாகலகம் வீதியும் லூகஸ் வீதியின் சந்தி வரை மேற்கு-லூகஸ் வீதியின் கிழக்குப் பகுதியிலிருந்து சந்திவரை மாதம்பிட்டி வீதியும், பர்கியுசன் வீதி சந்தி வரையாகும். | மு. ப. 11.00 பி. ப. 5.00 | பி. ப. 2.00 பி. ப. 8.00 | 5,000 | மு. ப. 10.30 | 2007.09.20 |

9. மேலதிக விபரங்கள் கொழும்பு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

10. **குறிப்பு.**- 2007.09.20 ஆந் திகதிக்கு விற்பனையாகாத கள்ளுத் தவறணை 2007.10.18 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும்.

ஏ. ஜே. கருணாரத்ன,
பிரதேச செயலாளர்,
கொழும்பு.

பிரதேச செயலகம்,
கொழும்பு,
2007, ஆவணி 20.

9-146/1

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கீழே காட்டப்பட்ட நிறுவனம் வரையறுக்கப்பட்ட கம்பனியாக கூட்டிணைக்கப்படுகிறது :-

*நிறுவனத்தின் பெயர் :* வரையறுக்கப்பட்ட இன் டிரவல் டூரஸ் (பிரத்தியேக) லிமிட்டெட்
*நிறுவனத்தின் இல. :* பி. வி. 60786
*பதிவுசெய்யப்பட்ட முகவரி :* 85/27, ஜாவத்த தோட்டம், ஜாவத்த வீதி, கொழும்பு 05

ஹிரான் பிறனான்து,
முகாமையாளர்.

9-04

---

## ஓலிவ்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) பிரிவின்கீழ் கூட்டிணைக்கப்படல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்

ஓலிவ்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என்ற பெயரில் புதிய கம்பனியொன்று 2007 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 14 ஆந் திகதி பீவி 61017 என்ற இலக்கத்தின்கீழ், கூட்டிணைக்கப்பட்டுள்ளதென்பதையும் புதிய கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் விலாசமானது இலக்கம் 45, ரத்னஜோதி மாவத்தை, கொஸ்வத்தை, நாவலயில் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நாம் பகிரங்க அறிவித்தல் தருகிறோம்.

ஈ. எம். அன்ட் ஈ. என். ஏஜென்ட்ஸ் அன்ட் செக்ரட்டறீஸ் பிறைவேட் லிமிட்டெட்,
புதிய கம்பனியின் செயலாளர்கள்,

எம். அன்ட் என். கட்டிடம் (5 ஆம் மாடி),
இல. 2, டீல் பிளேஸ்,
கொழும்பு 00300

9-05

---

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கந்தானை, ஹப்புகொட, ஜயசூரிய மாவத்தையில் இல. 30/B எனும் முகவரியில் வசிக்கும் திசானாயக்க முதலிகே றோஹன திசானாயக்க ஆகிய என்னால், கந்தானை பிரசித்த நொத்தாரிசு இயு. நிஹால் பெரேரா மூலமாக கந்தானை, ஹப்புகொட, ஜயசூரிய மாவத்தையில் இல. 30/B என்ற முகவரியில் வசிக்கும் சந்திரசேகர் பவுலிஸ்கே தமயந்தி சாதனா (றோஹன திசானாயக்கவின் மனைவி) என்பவருக்கு வழங்கப்பட்ட இல. 935, 12.01.2004 ஆந் திகதியுடைய விசேட அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்கிறேன் என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

மேலே சொல்லப்பட்ட சந்திரசேகர் பவுலிஸ்கே தமயந்தி சாதனா என்பவரினால் என் சார்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடடிவக்கைக்கோ, காரியத்திற்கோ நான் பொறுப்பேற்க மாட்டேன்.

திசாநாயக்க முதலிகே றோஹன திசானாயக்க.

9-24

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனி சட்டத்தின் 9 ஆம் பிரிவின் அடிப்படையில் கீழ் குறிப்பிட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம்

*கம்பனியின் பெயர் :* இனோர்பிட் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம் :* PV 60671 திகதி : 2007.07.16
*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி :* இல. 221/4, கொட்டா வீதி, கொழும்பு 08.

9- 127

---

## அட்டோர்னி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 8, எல்விட்டிகல தொடர் மாடி, எச் 1 வளவில் வசிக்கும் ஜயசேக்கர ஆரச்சிகே சிரிசேன ஆகிய நான், கொழும்பு 8, எல்விட்டிகல தொடர் மாடி, எச் 1 வளவில் வசித்த ஜயசேக்கர ஆரச்சிகே காமினி என்பவரை எனது அட்டோர்னி தத்துவக்காரராக நியமித்து கொழும்பு மாவட்ட பகிரங்க நொத்தாரிசு திரு. சோமபால விக்ரம நாயக்கவினால் உறுதிப்படுத்தப்பட்ட இல. 5529 மற்றும் 2000.07.12 எனும் அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தவதாக இத்தால் சகலருக்கும் அறிவிக்கின்றேன். மேற்படி அனுமதிப் பத்திரத்தின்கீழ் இதன் பிறகு அவரால் மேற்கொள்ளப்படும் எந்த விடயத்திற்கும் நான் பொறுப்பாளியாகமாட்டேன்.

ஜயசேக்கர ஆரச்சிகே சிரிசேன,

9-131

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிச் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

1. *கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 18.06.2007
2. *கம்பனியின் பெயர் :* பெஸ்ட் லைவ்(ப்) இன்டர்நெஷனல் (தனியார்) லிமிட்டெட்
3. *கம்பனியின் பதிவு இல. :* P. V. 60300
4. *பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி :* இல. 534, பாணந்துறை வீதி, ஹொரண.

செயலாளர்,
வரையறுக்கப்பட்ட பிசினஸ் பால்ஸ் (தனியார்)

9- 157

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிச் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 05.06.2007
*கம்பனியின் பெயர் :* வரையறுக்கப்பட்ட பிரிமெக் ஏஜன்ஸி தனியார் நிறுவனம்
*கம்பனி இல. :* P. V. 60153
*கம்பனியின் பதிவு முகவரி :* அறை இல. 102, 26 ஆம் மாடி, ஈஸ்ட் டவர், உலக வர்த்தக நிலையம், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1

செயலாளர்கள்,
பிரிமெக் ஏஜன்ஸி நிறுவனம்.

9- 158

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிச் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2007.06.20
*கம்பனியின் பெயர் :* பெட் கம்பியூட்டர்ஸ் (பிறைவட்) லிமிட்டெட்
*கம்பனியின் இல. :* P. V. 60341
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி :* 870A எத்துல்கோட்டே ரோட், எத்துல்கோட்டே

செயலாளர்கள்,
பெட் கம்பனியூட்டர்ஸ் (பிறைவட்) லிமிட்டெட்

9- 159

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனி சட்டத்தின் பிரிவு 9 (1) இற்கு இணங்க, ஒரு கம்பனி கீழ்வரும் பெயர், முகவரியின் கீழ் கம்பனிகள் பதிவாளர் அதிபதியினால் பதிவு செய்யப்படுகின்றது என்பதனை இத்தால் அறிவிக்கின்றது.

*கம்பனியின் பெயர் :* வரையறுக்கப்பட்ட கிறிஸ்ட்டல் கா(ர்)கோ என்ட்டபிரைசர்ஸ் (தனியார்) நிறுவனம்
*கூட்டிணைக்கப்பட்ட இலக்கம் :* பி. வி. 60783
*கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி :* 561/A, ஹீன்கெந்த, ராகம

நிறுவனத்தின் செயலாளர்.

9- 172

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனி சட்டத்தின் 9 (2) ஆம் பிரிவின் வண்ணம், கீழ்க்காணும் கம்பனியின் பெயரானது மாற்றப் பட்டுள்ளது என்பதை நாங்கள் இத்தால் அறியத்தருகின்றோம்:-

*கம்பனியின் முன்னைய பெயர் :* சஹானா நிதிச் சேவைகள் லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம் :* என் (பிபீஎஸ்) 1242
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி :* 127/1ஏ, சிலாபம் வீதி, கொலின்ஜாடிய, வென்னப்புவை
*கம்பனியின் புதிய பெயர் :* சஹானா சொத்துக்கள் சேவை லிமிட்டெட்

கம்பனியின் செயலாளர்,
வியாபார முகாமைத்துவ சேவைகள் லிமிட்டெட்.

9- 179

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனி சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் வண்ணம், கீழ்க்காணும் புதிய கம்பனியானது கூட்டிணைப் புச் செய்யப்பட்டுள்ளதென்பதை நாங்கள் இத்தால் அறியத் தருகின் றோம் :-

*கம்பனியின் முன்னைய பெயர் :* கிறியேற்றிவ் சேச் ரெக்னொலொஜீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம் :* பிவி 60752
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி :* 520, ஆர். ஏ. டி. மெல் மாவத்தை, கொழும்பு 3
*கூட்டிணைப்புச் செய்யப்பட்ட திகதி :* 2007, யூலை 23

கம்பனியின் செயலாளர்,
வியாபார முகாமைத்துவ சேவைகள் லிமிட்டெட்.

9- 180

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9(1) பிரிவின் அடிப்படையில் கீழ்க் குறிப்பிட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2007, ஆவணி 16 ஆந் திகதி கூட்டிணைக்கப் பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம் :-

கம்பனியின் பெயர் : ரி. ரி. லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 61055
பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி : இல. 316, காலி வீதி, கொழும்பு 03.

எச். டீ. சீ. டீ. விஜேசிங்க,
கம்பனி செயலாளர்.

9-232

---

**அறிவித்தல்**

குமா டென் இன்டநஷனல் (பிரைவெட்) லிமிட்டெட் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கமைய 2007, ஒகத்து மாதம் 2 ஆந் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்டதென இத்தால் அறியத்தருகின்றோம்.

பதிவு இல.: PV 60876 மற்றும்
பதிவு அலுவலகம் இல.: 4A, N. J. V. குரே மாவத்தை, ராஜகிரிய.

9-80

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான பகிரங்க அறிவித்தல்

கம்பனியின் பெயர் : ஜோன்கே ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 60908
கம்பனியின் பதிவு செய்யப்பட்ட
அலுவலக முகவரி : 40ஏ, 3 ஆம் ஒழுங்கை, கொரலவல்ல, மொறட்டுவை.

கம்பனி செயலாளர்.

9-231

---

# அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள்

**கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் வெளிநாட்டு குடிவகைத் தவறணை குத்தகை விற்பனை - 2008**

அரசினால் அனுமதிக்கப்பட் கீழ் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு பிரதேச பிரிவுகளிலும் பொருத்தமான இடத்தில் 2008, சனவரி 1 ஆந் திகதியிலிருந்து 2008, திசெம்பர் 31 ஆந் திகதிவரை தனியுரிமைப்படி கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு ஏற்ப வெளிநாட்டு மதுபான வகைகள் (எமது நாட்டு தானியங்களினால் தயாரிக்கப்படும் மதுபானங்கள் உட்பட) விற்பனை செய்வதற்காக கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

(i) 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் காணப்படும் வெளிநாட்டு மதுபான விற்பனைத் தவறணை நிபந்தனைகள் :

(ii) மதுபான குத்தகை அனுமதிப்பத்திரம் சம்பந்தமாக தற்போதுள்ள நிபந்தனைகள் :

2. கொழும்பு பிரதேச செயலக அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய மாதிரிப்பத்திரத்தின் மூலம் கேள்விப்பத்திரத்தை கீழே 'F' நிரலில் காட்டப்படும் ஒவ்வொரு தவறணைக்கும் நேராகக் காட்டப்படும் உரிய பணத்தை வைப்புச் செய்வதற்காக பிரதேச செயலகத்தினால் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன், பிரதேச செயலாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துரிமைச் சான்றிதழ் ஒன்றினையும் வைத்து அனுப்ப வேண்டும். பிரதேச செயலாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துரிமைச் சான்றிதழ் அச்சான்றிதழின் அட்டவணையில் குறிப்பிடப்படும். அத்துடன் அச்சான்றிதழை வழங்குவதற்காக கருத்திற்கொள்ளப்பட்ட எந்தவொரு சொத்தையும் விற்பனை செய்யாதுவிட்டால் அச்சொத்துரிமைச் சான்றிதழ் வழங்கப்பட்ட தினத்திலிருந்து ஐந்து வருடங்களுக்கு ஏற்புடையது. குத்தகைக் காலம் முடிவடைய முன்னர் சொத்துரிமைச் சான்றிதழ் ஏற்புடைய காலம் முடிவடையும் பட்சத்தில் பூரண குத்தகைக் காலத்திற்கு புதிய சொத்துரிமைச் சான்றிதழ் ஒன்றை கேள்விப்பத்திரத்துடன் சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறில்லாவிடில் குத்தகைக் காலம் முடிவடையும் வரை எஞ்சியுள்ள காலத்திற்காக குறைநிரப்பு சொத்துரிமைச் சான்றிதழ் ஒன்றை குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு முன்னராவது சமர்ப்பிக்க வேண்டும்.

3. கடித உறையிலிட்டு முத்திரை பதிக்கப்பட்ட ஒவ்வொரு கேள்விப்பத்திரத்தையும் கொண்டுள்ள உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கொழும்பு பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் ......................... ஐக் கொண்ட வெளிநாட்டு மதுபான தவறணைக்கான கேள்விப்பத்திரம்- 2008" எனக் குறிப்பிடப்பட வேண்டும். கேள்விப்பத்திரம் தவறணை பெயருக்கு நேராக கீழே குறிப்பிடப்படும் நேரத்திலும் தினத்திலும் கொழும்பு பிரதேச செயலகத்திற்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பப்பட வேண்டும். கேள்விதாரர் கேள்வி பெற்றுக்கொள்ளும் கடைசி நேரத்தில் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

4. தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர் அந்நேரத்திலேயே வாங்குபவராக அறிவிக்கப்படுவதுடன் மேலே குறிப்பிடப்பட்ட வெளிநாட்டு மதுபான குத்தகை தவறணை நிபந்தனைகளுக்கு ஏற்ப விற்பனை நிபந்தனைப் பத்திரத்தில் கைச்சாத்திடுவதற்காக குறிக்கப்படும் பணத்தொகையை பிணையாக பிரதேச செயலாளருக்கு செலுத்த வேண்டும்.

5. தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர் தனது கேள்விப்பத்திரத்தை ஏற்றுக்கொண்டதாக அறிவித்ததும் குத்தகை விற்பனை நிபந்தனைகளில் கைச்சாத்திடுதல் அல்லது குறிப்பிடப்படும் பிணைப்பணம் உரிய முறையில் வைப்புச் செய்தல் அல்லது தவறினால் அவர் வைப்புச்செய்த கேள்விப்பத்திர வைப்புப்பணம் கிடைக்காதுபோவதுடன், அவருடைய பெயர் மதுபானப் பத்திரங்களை வைத்திருப்போரின் குற்றவாளிகளின் பெயர்ப்பட்டியலில் இடம்பெற வாய்ப்புண்டு. வெற்றிபெற்ற கேள்விதாரரினால் முழுமையான பிணைப்பணம் வைப்புச் செய்யப்பட்ட பின்னர் விற்பனை நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின்னர் டென்டர் வைப்புப் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

6. எவ்வித காரணமும் காட்டாது ஒன்று அல்லது சகல கேள்விகளையும் மறுக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு உண்டு.

7. 2007 ஆம் வருடத்திற்கான வெளிநாட்டு மதுபான தவறணை வைத்திருக்கும் இடத்தையே பெற்றுக்கொள்ளலாம் எனக் கூறமுடியாது. வெற்றிபெற்ற கேள்விதாரரினால் உரிய பிரிவில் உரிய கட்டிடத்தை தேடிக்கொள்ள வேண்டி இருப்பதுடன், அக்கட்டிடம் சம்பந்தமாக மதுபானக் குத்தகை ஆணையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். கட்டிடங்களை வழங்குவதற்காக பிரதேச செயலாளர் கடமைப்படவில்லை என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

8. அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபானத் தவறணை பட்டியல் கீழே காட்டப்படுகிறது :-

| A<br>தொடர் இல. | B<br>அனுமதிக் கப்பட்ட பிரதேசம் | C<br>பிரதேசத்தின் அதிகார எல்லை, தவறணை அமையவேண்டிய பிரதேசம் | D<br>தவறணை திறக்கும் நேரம் | E<br>தவறணை மூடும் நேரம் | F<br>கேள்விக்காக வைப்புச் செய்ய வேண்டிய தொகை ரூபா | G<br>கேள்வி பெற்றுக் கொள்ளும் கடைசி நேரம் | H<br>விற்பனை செய்யும் திகதி |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | இல. 13 பிரிவு கோட்டை | (A) க்வீன் வீதியும் யோக் வீதியின் சந்திவரை, அச்சந்தியிலிருந்து உள்ள பேலி வீதிப் பகுதி<br>(B) கனல் ரோவும் பள்ளி வீதியின் சந்திவரை அச்சந்தியிலுள்ள யோக் வீதி மேற்குப் பகுதி<br>(C) யோக் வீதியும் ப்ளக்ஸ்டொப் வீதியின் சந்திவரை, அச்சந்தி யிலிருந்து சதம் வீதியின் இரு பக்கங்களும், சர்ச் வீதியும் சதம் வீதியின் சந்திவரையும் அச்சந்தியிலிருந்து உள்ள க்வீன் வீதியின் கிழக்குப் பிரதேசம் | மு. ப. 11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>பி. ப. 8.00 | 5,000 | மு. ப. 10.30 | 2007.09.21 |
| 2. | இல. 2 பிரிவு முகத்துவாரம் | பிரதேசம் பின்வருமாறு எல்லைப் படுத்தப்பட்டுள்ளது- வடக்காக : அலுத் மாவத்தை வீதியும் மோதர வீதியின் சந்தி வரையும், அச்சந்தி யிலிருந்து மாதம்பிட்டிய வீதியின் தென் பகுதியும் ; கிழக்காக : சாந்த அன்றூ பிரதேசமும் மாதம்பிட்டிய வீதியின் சந்திவரையும்,அச்சந்தி யிலிருந்து அலுத்மாவத்தை வீதியின் மேற்குப் பக்கமும் ; தெற்காக : சாந்த அன்றூ வீதியும் அலுத்மாவத்தை வீதியின் சந்திவரையும் அச்சந்தியி லிருந்து கீழாக சாந்த அன்றூ பிரதேசத்தின் வடக்குப் பக்கமும் ; மேற்கு : மலே வீதியும் கீழ் சாந்த அன்றூ பிரதேச சந்திவரை, அச்சந்தியிலிருந்து சாந்த அன்றூ வீதியின் கிழக்குப் பக்கமும் மாதம்பிட்டியவும் மலே வீதியின் சந்திவரையும் அச்சந்தியிலிருந்து மோதர வீதியின் கிழக்குப் பிரதேசமுமாகும். | மு. ப. 11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>பி. ப. 8.00 | 5,000 | மு. ப. 10.30 | 2007.09.21 |

9. மேலதிக விபரங்கள் கொழும்பு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

10. **குறிப்பு**.- 2007.09.21 ஆந் திகதி விற்பனையாகாத மதுபான தவறணைக் குத்தகை 2007.10.19 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும்.

ஏ. ஜே. கருணாரத்ன,
பிரதேச செயலாளர்,
கொழும்பு.

பிரதேச செயலகம்,
கொழும்பு,
2007, ஓகத்து 20.

9-146/2

# ஏல விற்பனைகள்

## மக்கள் வங்கி- தலைமை அலுவலகக் கிளை

1986 ஆம் ஆண்டின 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மககள் வங்கி சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் விற்பனை

**மத்தேகொடையில் அமைந்துள்ள பெறுமதிமிக்க குடியிருப்பு ஆதனம் ஏல விற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : இருபத்தொன்று தசம் ஆறு ஆறு பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 21.66பே.)**

மக்கள் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிட்ட ஆதனத்தை 2007.08.28 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு**.-2007.04.12 ஆந் திகதிய அரச வர்த்தமானியையும் 2007.04.03 ஆந் திகதிய "தினமின", "டெய்லி நியூஸ்" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்திற்குச் செல்லும் வழி**.- கொழும்பிலிருந்து கொட்டாவ நகருக்கு சென்று வலப்பக்கத்திலுள்ள வீதி வழியே ஏறக்குறைய 2 கி. மீ. தூரம் செல்ல மத்தேகொடை வீடமைப்பு திட்டத்தை காண்பீர்கள். அவ்வீடமைப்பு திட்டத்தின் பஸ்தரிப்பை கடந்து ஏறக்குறைய 100 மீற்றர் செல்ல வலப்பக்கத்தில் ஈகிள் ஹவுஸ் வீதியைக் காண்பீர்கள். அவ்வீதிக்கு வலப்பக்கத்தில் இரண்டாவதாக இவ்வீடு உள்ளது.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.-வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) எழுதுவினைஞர் மறறும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(5) விற்பனை செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (இருப்பின்) ;
(6) விற்பனை சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் "கொழும்பு 1, டியூக் வீதி, இல. 11, மக்கள் வங்கி - மேற்கு 1, உதவிப் பொது முகாமையாளர்" இடம் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 2393678, 2387068, தொலைநகல் இல. : 2439527.

உரித்து உறுதிகளையும் வேறேதேனும் குறிப்புக்களையும் மேற்கூறப்பட்ட முகவரியில் பெற்றுக் கொள்ளவும்.

சொல்லப்பட்ட தொகை மேற்கறுப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ஐத் தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

ஈ. எஸ். ராமநாயக்க,
(தீவு முழுவதுக்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், உத்தரவுபெற்ற
ஏலதாரர் மற்றும் விலைமதிப்பிடுநர்.

இல. 11/55, குடாபுத்கமுவ,
அங்கொடை.
தொலைபேசி இல. :அலுவலகம் : 011-575636
இல்லம் : 011-2419126.

9-237

---

## வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி - மொனறாகலை கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான ஏலவிற்பனை அறிவித்தல்

**சொத்து ஏல விற்பனை**

பதுளை பிரசித்த நொத்தாரிசு ஐ. எம். ஜீ. ஆனந்த என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கிப் பெயருக்கு எழுதப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான

1998.11.11 ஆந் திகதியதும் இலக்கம் 8295 என்ற முறியின் கீழ் வருமதியான கொடுப்பனவில் கீகத கமகே ஸுனில் என்பவர் கடனாளராக தவணை தவறியுள்ளராதலால்,

வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி என் மீது அளித்த அதிகாரத்தின் கீழ் கீழே குறிப்பிடும் சொத்து அமைந்துள்ள இடத்திலேயே 2007, செத்தெம்பர் 27 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**சொத்தின் விவரணம்.**-ஊவா மாகாணம், மொனறாகலை மாவட்டம், மொனறாகலை பிரிவுக்குள், புத்தள வெதிரட கோரளே முப்பதயில் இருக்கும் பகினிகோடேவத்த என்ற பெயரால் அறிமுகப்படுத்தப்படும் காணிக்கு அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் டபிள்யு. டி. சில்வா என்பவரால் அளந்து வேறாக்கப்பட்ட 1992.08.04 ஆந் திகதிய 420 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் லொட் 01 பீ மற்றும் அங்குள்ள கட்டிடங்கள், சொத்துக்கள் அனைத்தும் ஆகும். (விஸ்தீரணம் : 30 பேர்ச்சஸ்.)

**தீர்மான அறிவித்தலுக்காக.**-2007.06.15 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2007.06.25 ஆந் திகதிய 'ஐலன்ட்', 'திவயின' மற்றும் 'தினகரன்' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**-ஏலவிற்பனை முடிவில் வெற்றி பெற்ற கொள்வனவாளர் கீழ்க் குறிப்பிடுகின்ற படி பணமாகச் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 10% ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்த வேண்டிய வரியாக உள்ளூர் விற்பனை வரி 1% ;
(3) ஏலவிற்பனையாளரின் தரகுப் பணம் விலையில் 2 1/2% ;
(4) இலிகிதர் அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;
(5) விற்பனை செலவும் இதர செலவுகளும் இருப்பின் அப்பணம்;
(6) நொத்தாரிசு கட்டணம் 2000.

கொள்வனவு விலையில் 90% க்கான பணத்தை விற்பனை திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கிக்கு கொடுக்க வேண்டும். 30 நாட்களுக்குள் கொடுக்காவிட்டால் கொள்வனவு விலையின் 10% தொகையை மீண்டும் செலுத்தாமல் விடுவதற்கும் மீண்டும் ஆதனத்தை விற்பனை செய்யும் உரிமையும் வங்கிக்கு உண்டு.

உரிமை கோரும் ஒப்பினையையும் இதர குறிப்பிட்ட விபரங்களையும் "வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி, கொழும்பு 10, டீ. பி. ஜாயா மாவத்தை, இலக்கம் 479, பிரதான அலுவலகம், பிரதான முகாமையாளர் (கடன் அறவீடு)" இடம் பெற்றுக் கொள்ளலாம். தொ. பே. இல. 2661815, 2661816.

என். எச். பீ. எப். ஆரியரத்ன,
நீதிமன்ற ஆணையாளரும்,
அதிகாரம் பெற்ற ஏலதாரரும்

இலக்கம் 34/31, மற்றும் 32,
நீதி சட்டத்தரணிகள் அலுவலகத் தொகுதி.

9-201

**மக்கள் வங்கி - லக்கி பிளாஸா கிளை**

ஈடுவைக்கப்பட்ட பொறித்தொகுதிகளின் விவரம்

| இல. | குறி. இல. | பொருள் | இயந்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | B/D/C/M 1 முதல் 2 | இரத்தினக்கல் வெட்டும் பொறிகள் முழுத் தொகுதி | 50 |
| 2. | B/O/D/M 1 முதல் 2 | O/D இயந்திரங்கள் | 2 |
| 3. | B/D/BM 1 முதல் 16 | புறாட்டிங் பொறிகள் தடியுடன் | 16 |
| 4. | B/D/M/M | பேணல் இயந்திரம் முழுத் தொகுதி | 1 தொகுதி |
| 5. | B/D/W/P | வேல்டிங் பொறி (டெல்வின்) | 1 |
| 6. | B/D/T/E | டேங் எக்ஸ்ட்ரா | 39 |
| 7. | B/D/T/L 1 முதல் 7 | மேசை விளக்கு (டேசர்) | 7 |
| 8. | B/D/S/T | சல்லடை-டேர்போ (பாவித்தது) | 11 |
| 9. | B/D/S/D 1 முதல் 16 | சல்லடை-டயமண்ட் | 16 |
| 10. | B/D/S/D | சல்லடை-டயமண்ட் | 34 |
| 11. | B/D/P/B 1 முதல் 1 | கொதிகலப் பொறி | 02 |
| 12. | B/D/J/A 1 முதல் 2 | ஜாக் | 02 |
| 13. | B/D/SC 1 முதல் 1 | தராசுகள் (சட்டோரியஸ்) | 01 |
| 14. | B/D/SC 1 முதல் 2 | தராசுகள் (சட்டோரியஸ்) 1,500 Cts | 02 |
| 15. | B/D/SC 1 முதல் 1 | தாரசுகள் (ADM) 1,500 Cts | 01 |
| 16. | B/D/P/S 1 முதல் 1 | பொலிதீன் சீலர் | 01 |

இரத்தினக்கல் விலைமதிப்பீட்டுப் பொறி

| | | | |
|---|---|---|---|
| 1. | B/L/F/M 1 முதல் 147 | பெசெற்றிங் பொறி (இரட்டைக் கை) | 147 |
| 2. | B/L/F/M 1 முதல் 46 | பெசெற்றிங் பொறி (ஒற்றை) | 46 |
| 3. | B/L/F/M 1 முதல் 20 | பெசெற்றிங் பொறி (ஒற்றை Fac-08) | 20 |
| 4. | B/L/F/M 1 முதல் 37 | பெசெற்றிங் பொறி இரட்டை | 37 |
| 5. | B/L/F/M 1 முதல் 1 | பெசெற்றிங் பொறி இரட்டை 10பீ | 01 |
| 6. | B/L/C/M 1 முதல் 3 | கலிபரேஷன் பொறி (கை) | 01 |
| 7. | B/L/C/M 1 முதல் 7 | கலிபரேஷன் பொறி | 07 |
| 8. | B/L/C/M 1 முதல் 5 | கலிபரேஷன் பொறி (ஓரளவு தன்னியக்கம்) | 05 |
| 9. | B/L/G/M 1 முதல் 2 | கிரைண்டிங் பொறி | 02 |
| 10. | B/L/S/M 1 முதல் 14 | தையல் இயந்திரம் | 14 |

| இல. குறி. இல. | பொருள் | இயந்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 11. B/L/S/H/M 1 - 2 | தையல் இயந்திரம் (இரட்டை) | 02 |
| 12. B/L/T/U/M | தம்பிலின் பொறி | 01 |
| 13. B/L/P/M 1 முதல் 7 | பேர்போமிங் பொறி (இரட்டை) | 07 |
| 14. B/TR/ST 1 முதல் 2 | ஸ்டொப் சோன் ட்ரான்ஸ்போமர் | 02 |
| 15. B/F/ EX | 1. எக்ஸ்ஹோஸ் விசிறி 18" | 01 |
| | 2. எக்ஸ்ஹோஸ் விசிறி 12" | 01 |
| | 3. எக்ஸ்ஹோஸ் விசிறி 12" | 01 |
| 16. B/B/G 1 முதல் 4 | வாயு அடுப்பு | 06 |
| 17. B/P/A 1 முதல் 4 | காற்றுப் பம்பு | 04 |
| 18. B/M/E 1 முதல் 12 | மின்சார மோட்டர் 1/2 கு. வ. | 12 |
| 19. B/M/E/CA 1 முதல் 2 | கலிபரேட்டிங் பொறி மோட்டர் 1/2 கு.வ. | 02 |
| 20. B/F/S/M 1 முதல் 2 | சீலிங் விசிறி மோட்டர் | 02 |
| 21. B/B/V 1 முதல் 1 | பென்ஞ் வைஸ் | 01 |
| 22. B/D/B 1 முதல் 164000 | பித்தளை டிப் தடி 8 மி. மீ. | 164,000 |
| 23. B/D/A 1 முதல் 3200 | அலுமினியம் டிப் தடி | 3200 |
| 24. B/CA/DI 1 முதல் 2 | ஆல்பா இலத்திரனியல் தராசு 500 கிராம் | 02 |
| 25. B/CA/DIA 1 முதல் 2 | டிஜிட்டல் கலிப்பர் | 2 |
| 26. B/CA/DIA 1 முதல் 8 | டயல் கலிப்பர் | 8 |
| 27. B/T/W 1 முதல் 2 | மர இயந்திர மேசை | |
| | 1. 13'x 4' (5x2) | 1 |
| | 2. 7'x 2' (3x1) | 1 |
| | 3. 45'x 2' (2x1) | 1 |
| | 4. 12'x 14' (4x2) | 1 |
| | 5. 3'x 3' | 1 |
| | 6. 2'x 3' | 1 |
| 28. B/T/M/FO 1 முதல் 2 | இயந்திர மேசை மேற்பரப்பு | |
| 29. B/B/W 1 முதல் 10 | மரவாங்குகள் 25 x 1.5 | 10 |
| 30. B/CU/W | மரச்சிற்றலுமாரி | |
| | 1. 3'x 4.5 x 1.5 | 1 |
| | 2. 4'x 4' x 1.5 | 1 |
| | 3. 3'x 4' x 1.5 | 3 |
| 31. B/T/DO 1 முதல் 1 | டொப்பிங் மேசை 2.5' x 3 | 1 |
| 32. B/T/CI 1 முதல் 2 | எழுது வினைஞர் மேசை | 2 |
| 33. B/D/RA 1 முதல் 1 | டோப் ஸ்டிக் பாக் 5' x 4.5' | 1 |
| 34. B/T/I 1 முதல் 1 | பரிசோதனை மேசை 3' x 3' | 1 |
| 35. B/CH/W/CA 1 முதல் 4 | மரத்துடன் பிரம்புக் கதிரை | 4 |
| 36. B/CH/W 1 முதல் 3 | மரக்கதிரை | 3 |
| 37. B/D/WCH 1 முதல் 1 | முர செஸ்ட் ஒவ் ட்ராயர்ஸ் 2.75' x 1.25" | 1 |
| 38. B/CH/FI 1 முதல் 1 | பைலிங் கபினட் (உருக்கு) | 1 |
| 39. B/SA/IR 1 முதல் 1 | இரும்புப் பெட்டி 4' x 2' x 2.5' | 1 |
| 40. F/F/SC 1 முதல் 72 | சீலிங் விசிறி | 72 |
| 41. F/F/T 1 முதல் 4 | மேசை விசிறி | 4 |
| 42. B/F/PD 1 முதல் 1 | பெடஸ்ட்டல் விசிறி | 4 |
| 43. B/T/L | டியூப் லைட் இணைப்புகள் | |
| | 1, 2 அடி | 21 |
| | 2. 4 அடி | 13 |
| 44. B/CY/G 1 முதல் 4 | வாயு சிலிண்டர் | 4 |
| 45. B/G/H 1 முதல் 1 | கை கிறைண்டர் | 1 |
| 46. B/L/T 1 முதல் 1 | மேசை விளக்கு | 2 |
| 47. B/ST/W 1 முதல் 40 | மர முக்காலிகள் | 40 |

**ஏல விற்பனை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள்வங்கி சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் மக்கள் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் மேற்குறிப்பிடப்பட்ட பொறிகளை 2007, செத்தெம்பர் 29 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.*

**மேலதிக விபரங்களுக்கு**.- *2007.8.8 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2007.7.19 ஆந் திகதிய 'தினமின', 'டெய்லி நியூஸ்' மற்றும் 'தினகரன்' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**ஆதனத்திற்குச் செல்லும் வழி**.- பண்டாரவளை மத்திய பஸ் நிலையத்திலிருந்து பிந்துனுவெவ வீதி வழியே ஏறக்குறைய 500 மீற்றர் செல்ல இடப்பக்கத்திலுள்ள விசாகா மாவத்தையை எதிர் கொள்வீர்கள். இவ்விசாகா மாவத்தை வழியே ஏறக்குறைய 300 மீற்றர் செல்ல "டயமண்ட் புறொஸெஸிங் பெக்டரி" அமைந்துள்ள இவ்வாதனம் வீதிக்கு இடப்பக்கத்தில் அமைந்துள்ளது. இவ்வாதனத்தில் இப்பொறிகள் அமைந்துள்ளன.

**கொடுப்பனவுகள் செய்யும் விதம்**.-வெற்றி பெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும் :-

(1) பொறிகளின் முழுக் கொடுப்பனவு ;
(2) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2 (இரண்டரை வீதம்) ;
(3) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(4) விற்பனை செலவு மறறும் வேறேதேனும் கட்டணங்கள் (எவையேனுமிருப்பின்) ;
(5) விற்பனை சான்றிதழின் முத்திரைக் கட்டணம்.

ஏதேனும் குறிப்புக்களை "கொழும்பு 01, டியூக் வீதி, இல. 11, மேற்கு - 1, மக்கள் வங்கி, உதவிப் பொது முகாமையாளர்" அவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி இல. 2393678, 23 87 028, 2435977.

ஈ. எஸ். ராமநாயக்க,
(தீவு முழுவதுக்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், உத்தரவுபெற்ற ஏலதாரர்,
மற்றும் விலைமதிப்பிடுநர்.

*அலுவலகம் :*
25சீ, பெல்மொண்ட் வீதி,
கொழும்பு 12,
தொலைபேசி இல. 011-5756356

*இல்லம் :*
இல. 11/55, குடாபுத்கமுவ,
அங்கொடை.
தொலைபேசி இல. : 011-2419126.

9-236

---

**மக்கள் வங்கி - லக்கி பிளாஸா கிளை**

பெறுமதிமிக்க காணி (பதுளை மாவட்டம், பண்டாரவளை பிரதேச செயலாளர் பிரிவு, மஹா பலாத்த கோறளை, கபில்லவெல கிராமத்தில் அமைந்துள்ளது) ஏல விற்பனை

**(காணியின் விஸ்தீரணம் : 01ஏ. 02றூ. 17பே.)**

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி**.- பண்டாரவளை மத்திய பஸ் நிலையத்திலிருந்து பிந்துனுவெவ வீதி வழியே ஏறக்குறைய 500 மீற்றர் செல்ல இடப்பக்கத்திலுள்ள விசாகா மாவத்தையை எதிர் கொள்வீர்கள். அவ்விசாகா மாவத்தை வழியே ஏறக்குறைய 300 மீற்றர் செல்ல "டயமண்ட் புறொஸெஸிங் பெக்டரி" அமைந்துள்ள இவ்வாதனம் வீதிக்கு இடப்பக்கத்தில் அமைந்துள்ளதை காண்பீர்கள்

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள்வங்கி சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் மக்கள் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் மேற்குறிப்பிடப்பட்ட காணியை 2007, செத்தெம்பர் 29 ஆந் திகதி பி. ப. 1.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**மேலதிக விபரங்களுக்கு**.- 2007.8.8 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2007.7.19 ஆந் திகதிய 'தினமின', 'டெய்லி நியூஸ்' மற்றும் 'தினகரன்' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவுகள் செய்யும் விதம்**.-வெற்றி பெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்);
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2 (இரண்டரை வீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(5) விற்பனை செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (எவையேனுமிருப்பின்) ;
(6) விற்பனை சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் "கொழும்பு 01, டியூக் வீதி, இல. 11, மேற்கு - 1, மக்கள் வங்கி, உதவிப் பொது முகாமையாளர்" அவர்களிடம் செலுத்த வேண்டும்.. தொலைபேசி இல. 2393678, 2387068, தொலைநகல் இல. : 2435977.

உரித்து உறுதிகளையும் வேறேதேனும் குறிப்புக்களையும் மேற் கூறப்பட்ட முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

சொல்லப்பட்ட தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

ஈ. எஸ். ராமநாயக்க,
(தீவு முழுவதுக்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், உத்தரவுபெற்ற ஏலதாரர்,
மற்றும் விலைமதிப்பிடுநர்.

*அலுவலகம் :*
25சீ, பெல்மொண்ட் வீதி,
கொழும்பு 12,
தொலைபேசி இல. 011-5756356

*இல்லம் :*
இல. 11/55, குடாபுத்கமுவ,
அங்கொடை.
தொலைபேசி இல. : 011-2419126.

9-242

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
***1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது***
***"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி"***
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்**.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 2.30 மணி வரை நடைபெறும்.

5. ***சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.*** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. ***நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்*** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. ***கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.***

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் "சுப்றீம் கோட்" புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. ***வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி*** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. ***ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.***

13. ***1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-***

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் VI பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட விசேட வர்த்தமானி | 3,360.0 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) | I வது பகுதி | 31.00 | 5.00 |
| | II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) | I வது பிரிவு | 10.00 | 5.00 |
| | II வது பிரிவு | 12.00 | 5.00 |
| | III வது பிரிவு | 9.00 | 5.00 |

***இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், 32, லோட்ஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.***

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டுருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், 32, லோட்டஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தா பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதையும் கவனத்திற் கொள்க.**

**அட்டவணை - 2007**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 07.09.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.08.2007 |
| | | வெள்ளி | 14.09.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.08.2007 |
| | | வெள்ளி | 21.09.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.09.2007 |
| | | வெள்ளி | 28.09.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.09.2007 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 05.10.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.09.2007 |
| | | வெள்ளி | 12.10.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.09.2007 |
| | | வெள்ளி | 19.10.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.10.2007 |
| | | வெள்ளி | 26.10.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.10.2007 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 02.11.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.10.2007 |
| | | வெள்ளி | 09.11.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.10.2007 |
| | | வெள்ளி | 16.11.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.11.2007 |
| | | வெள்ளி | 23.11.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.11.2007 |
| | | வெள்ளி | 30.11.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.11.2007 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007, சனவரி 01.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.